**ஜூலை - 9**

**"அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது." - யோவா 10 : 4.**

நல்ல மேய்ப்பனுடைய சப்தம் வேறு எந்த சத்தத்தாலும் சேர்க்கப்படாத விதமாக பல்வேறு ஓசைகளின் சேர்க்கையாயிருக்கிறது. அவருடைய சத்தம் அன்பின் வீணை நரம்புடன் கலந்து நீதியின் வீணை நரம்பை ஒலிக்கச் செய்கிறது. மேலும் எல்லாம், ஞானம், வல்லமை இவைகளின் குரலோடு விளம்பப்படுகிறது. மகாப்பெரிய மேய்ப்பன் தனது குமாரன் மூலமாக நமக்கு அனுப்பியிருக்கிற செய்திக்கு இருப்பதைப்போல மனிதனுடையதும், பிசாசுகளுடையதுமான மற்றக் கோட்பாடுகளுக்கும் , ஏற்பாடுகளுக்கும், திட்டங்களுக்கும் இந்த விதமான சத்தத்தின் இணக்கம் கிடையாது. மேலும் உண்மையான ஆடுகள் நல்ல மேய்ப்பனின் சத்தத்தைக் கேட்கும்போது, மற்றெதுவும் செய்யக்கூடாத விதமாக அது அவர்களுடைய ஆசைகளை திருப்தி செய்கிறது. மற்ற சத்தங்களினாலோ, குரல்களினாலோ, கோட்பாடுகளினாலோ, அல்லது திட்டங்களினாலோ இனி அவர்களுக்கு அபாயம் இருக்காது. ஆனால், இவைகள் எல்லாவற்றிற்கும், "யேசு திருப்தி செய்திருக்கிறார் யேசு என்னுடையவர்" - என்று பதில் சொல்லுவார்கள். **- Z '00, 230 (R 2672)**

கர்த்தர் தனது மரணத்தினாலே, தன்னுடைய ஆடுகளை மோசேயின் உடன்படிக்கையின் ஆட்டுப் பட்டியிலிருந்து வெளியே விட்டார். அவர்களுடைய பிரதிஷ்டை அவருக்குள் இருக்கிறது. உண்மையுள்ள மேய்ப்பனைப்போல, அவர் விரட்டாமல், அவர்களை வழி நடத்தினார். புல்லுள்ள இடங்களுக்கும், அமர்ந்த தண்ணீர்களண்டைக்கும் பாக்கியமுள்ள நீதியின் பாதைகளிலும் அவைகள் அவரைப்பின் தொடர்ந்தன. தங்களுக்கு ஜீவனாயிருக்கிற அவருடைய சத்தத்தை, அதாவது சத்தியத்தை, அதன் இனிமையான, ஆறுதல் கொடுக்கிற, இணக்கமான சப்தத்தினால் அடையாளம் கண்டு கொள்ளுகிறார்கள். **- P '36, 94.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**எசே 34:2,12,14,23; யோவா 14:6; ரோம 5:1,2; எபி 10:19-22; யோவா 10:1-18; 15:13; சங் 23:1-4; எபி 13:20; 1பேது 5:4; சக 11:17; நெகே 1:7; 1கொரி 8:3; 2தீமோ 1:12; ஏசா 53:6.**

**கோபுர வாசிப்பு : Z '10, 398 (R 4732).**

**வினாக்கள்: இந்த வாரத்தில் கிறிஸ்து மேய்ப்பராகவும் நான் ஆடாகவும் ஒருவருக்கொருவர் நடந்து கொண்டவிதம் என்ன? எந்தச் சந்தர்ப்பங்களில்? அதன் பயன்கள் எவை?**